1973 நவம்பர் 22]

அமோக விளைச்சல் தரும் சப்போட்டா ரகம்

*319 வினா திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை விவசாயப் பல்கலைக் கழகத்தின் மூலம் அதிக விளைச்சல் தரும் சப்போட்டா பழ ரகம் ஏதேனும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) ஆம். கோ 1 என்ற சப்போட்டா வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை 360 ஒட்டுச் செடிகள் பயிரிட வழங்கப்பட்டுள்ளன. மரம் ஒன்றுக்கு சராசரி 40 கிலோ மகசூல் கிடைக்கும். இவ்வகை சப்போட்டா மரங்கள் நோயினாலும் பூச்சிகளாலும் பாதிக்கப்படுவதில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இப்படி ஆராய்ச்சி செய்து கண்டுள்ள சப்போட்டா மரங்கள் வெளி மாநிலங்களுக்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டனவா ? நம் மாநிலத்தில் எந்தெந்தப் பகுதிகளில் அது பயிரிடப்படுகிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வெளி மாநிலங்களுக்கு அனுப்பத்தக்க அளவிற்கு இங்கு தயாராகவில்லை. ஆகவே வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுவதில்லை என்று நான் கருதுகிறேன். எந்தெந்த மாநிலங்களுக்கு எவ்வளவு மரங்கள் கொடுக்கப்பட்டன என்ற விவரம் என் கைவசம் இப்போது இல்லை.

மதுரை மாவட்டத்தில் உருளைக்கிழங்கு உற்பத்திப் பெருக்கத்திற்கு ஊக்கம்

*320 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில், உருளைக்கிழங்கு சாகுபடி செய்வதற்கென விவசாயிகளை ஊக்குவிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், 1972–73-ல் எவ்வளவு ஏக்கரில் உருளைக்கிழங்கு சாகுபடி மேற்கொள்ளப்பட்டது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) & (இ) ஆம். 1972–73-ம் ஆண்டு மதுரை மாவட்டத்திலுள்ள கொடைக்கானல் தாலுக்காவில் 7,113 ஏக்கரில் உருளைக்கிழங்கு பயிர் செய்யப் பட்டது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : உருளைக்கிழங்கு பயிரிடும் விவசாயிகளுக்கு எந்தெந்த வகைகளில் அரசு உதவி செய்து ஊக்கமளிக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : விதை கொடுக்கிறார்கள். இன்னும் அதைப் பயிரிடுவதற்கு வழிவகைகள் எல்லாம் சொல்கிறார்கள். வேறு என்னென்ன உதவிகள் என்ற விவரம் இப்போது என் கைவசம் இல்லை. ஆனால் அரசாங்கம் முன்னின்று, நல்ல தரமான விதைகளை அவர்களுக்கு வழங்கச் செய்கிறோம் என்பது எனக்குத் தெரியும்.

திரு. எம். தேவராசன் : நீலகிரியில் உள்ள இண்டோ-ஜெர்மன் மேம்பாடு திட்டத்திற்கு எக்ஸ்டென்ஷன் கொடுக்கப் பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : கொடுக்கப்பட்டிருக் கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Potato is grown in large quantities in Hosur and Denkanikota taluks. The growers there want to preserve it till they get good prices. For that they require cold storage facilities. Will the Hon. Minister see that such facilities are provided in Hosur taluk?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : எப்படி ப்ரிசர்வ் செய்து வைப்பது என்பது பற்றிச் சொன்னார்கள். சென்னைக்கு கொண்டு வந்தால் இங்கு குளிர்பதன அறைகள் இருக்கின்றன. அங்கு வைக்கலாம். ஹோசூரில் வைத்தால் கிழங்கு விற்பனையாகாது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது என்னென்ன விதைகள் தருகிறோம் என்பது பற்றி விவரம் இல்லை என்று சொன்னார்கள். எவ்வளவு தொகைதான் ஒதுக்கப்பட்டது என்பதற்காவது விவரம் இருக்கிறதா ?

1973 நவம்பர் 22]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது என்பதற்குக்கூட விவரம் இப்போது என் கைவசம் இல்லை. ஆனால் இதில் சற்று எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஏனெனில் ஊட்டியில், தேவராசன் அவர்கள் இடத்தில், உருளை பயிர் செய்து 'கோல்டன் நெமட்டோட்' பூச்சி வந்து அரித்து அந்தப் பூச்சிகளிடமிருந்து பயிரை அதாவது கிழங்கை எப்படிக் காப்பாற்றுவது என்பது பற்றி ஜெர்மன் நிபுணர்களுக்குக்கூடத் தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மேற்கொண்டு விஸ்தரிப்பது என்பதில், சிறிது எச்சரிக்கையோடு விஸ்தரிக்க வேண்டுமென்று நாம் கருதுகிறோம்.

திரு. கு. ஆ. பொம்மன்: தலைவரவர்களே, விவசாயிகளுக்குத் தரமான விதைகள் தரப்படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தரமான விதைகள் எங்கேயிருந்து உற்பத்தி செய்யப்பட்டுக் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தற்போது வரும் உருளைக்கிழங்கு விதைகள் ஊட்டி பகுதியில் இருந்து தான் வருகின்றன.

மதுரை மாவட்டத்தில் தென்னந் தோப்புகள்

*321 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கூருவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் தென்னந்தோப்புகளை உருவாக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எத்தனை ஏக்கரில் உருவாக்கத் திட்டமிடப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெற்று, மதுரை மாவட்டத்தில் நான்கு ஆண்டு காலத்தில் ஐயாயிரம் ஏக்கர் நிலத்தில் தென்னந்தோப்புகள்